**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 142/2015**
**நாள்.04.08.2025**
**வா.சா.2-பெருமாள்**
**த/பெ - மாரியப்பன்**

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான்.

2. இவ்வழக்கின் வாதி சேகர் வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு என்னை அழைத்து வந்தார் என்றால் சரிதான்.

3. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் வாதி சேகர் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

4. தாவா வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

5. யார் யார் மேல், என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6. எங்கள் ஊரில் இருந்து அய்யலூர் செல்லும் தார் சாலை எந்த சர்வே எண்ணில் செல்கிறது என்று குறிப்பிட்டு என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். சர்வே எண் தெரியாது.

7. எங்கள் ஊரில் இருந்து அய்யலூர் செல்லும் தார் சாலையானது முன்பு வண்டிப்பாதையாக இருந்ததற்கான வருவாய் துறை ஆவணங்களை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான்.

8. நத்தம் புறம்போக்கு நிலமான 20 செண்ட் நிலத்தை அப்துல் கரீம் மற்றும் அவரது சகோதரர் அப்துல் சத்தார் ஆகியோர் எதன் அடிப்படையில் அவர்கள் அனுபவித்து வந்தார்கள் என்று நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

9. அப்துல் சத்தார் மற்றும் அப்துல் கரீம் ஆகியோர் வாதி சேகருக்கும், பின்னியப்பதேவருக்கும் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

10. கிரையம் செய்து கொடுத்த புறம்போக்கு நிலத்திற்கு கீழ்புறமுள்ள பட்டா நிலத்தையும் சேர்த்து சேகருக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்று சொல்லியுள்ள நிலையில் அச்சொத்தில் விஸ்தீரணம் எவ்வளவு, சர்வே எண் என்ன என்ற விவரத்தை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

11. பிரதிவாதிகள் ராஜேந்திரன் மற்றும் விஜயலட்சுமி ஆகியோர் வாதி சேகரிடம் இருந்து ஒரு கிரையம் வாங்கியுள்ளனர் என்றால் சரிதான். அதன் சர்வே எண்.264/1 என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

12. எங்கள் ஊரில் ஆழ்துளை கிணறு, முருகன் கோவில், பள்ளிக்கட்டிடங்கள் இரண்டு, சத்துணவு கூடம், விநாயகர் கோவில், ரேடியோ அறை, கலையரங்கம் ஒன்று, வண்டிப்பாதை, 2C புளியமரங்கள் ஐந்து ஆகியவை சர்வே எண்.279/1 ல் உள்ளன என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. மேற்படி கட்டிடங்கள் அமைந்துள்ள இடங்கள் புறம்போக்கு நிலமா அல்லது பட்டா நிலமா என்று எனக்கு தெரியாது.

13. சேகரிடம் இருந்து கிரையம் பெற்ற இடத்தில் 1,2 பிரதிவாதிகள் வீடுகட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி 1,2 பிரதிவாதிகள் கட்டியுள்ள வீட்டில் இருந்து ரோட்டிற்கு வருவதாக இருந்தால் பழைய சர்வே எண்.279/1, புதிய சர்வே எண்.839/5 ல் உள்ள பாதை வழியாக தான் போய் வரவேண்டும் என்றால் சரிதான். மேற்படி பாதை தென்வடல் பாதை என்றால் சரிதான்.

## 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

14. நான் வடுகபட்டியில் குடியிருந்து வருகிறேன்.

15. வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் உண்மையை பற்றி சாட்சியம் அளிக்க வாதி கூறினார்.

16. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும்

17. தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள சொத்திற்கான சர்வே எண் மற்றும் நான்குமால் ஆகியவை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

18. எவ்வளவு விஸ்தீரணத்திற்கு தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் 20 செண்ட் என்று சொல்கிறார்கள்.

19. சர்வே எண்.279/1 நத்தம் புறம்போக்காக நாளது தேதிவரை உள்ளது என்றால் சரிதான்.

20. சர்வே எண்.279/1 ல் ஆழ்துளை கிணறு 1, முருகன் கோவில், பள்ளிக்கட்டிடங்கள் 2, சத்துணவு கூடம் 1, விநாயகர் கோவில், ரேடியோ அறை 1, தொலைக்காட்சி அறை 1, கலையரங்கம் 1, வண்டிப்பாதை, 2C புளியமரங்கள் 5 உள்ளன என்று அடங்கில் வருகிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

21. வாதி எனக்கு உறவினரா என்றால் இல்லை. பக்கத்து தோட்டத்துகாரர். தாவா வழக்கின் உண்மைத்தன்மை எனக்கு தெரியவில்லை என்றாலும், வாதி சொல்லிக்கொடுத்தபடி அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

PETER B Digitally signed by PETER B

**Principal District Munsif**
**Vedasandur**